விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 085 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 30 திங்கட்கிழமை (14.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின

### கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் தமிழ்ச்செல்வன் கஜலக்ஸன் 198 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் சாதனை



(யாழ்ப்பாணம்)
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்றிரவு பரீட்சைகள் திணைக்கள உத்தி யோகபூர்வ இணையத்தளங் களில் வெளியிடப்பட்டன.
அதனடிப்படையில் நேற்றிரவு 10.20 மணிவரை உத்தியோக பூர்வமாக வலயக்கல்வி பணிப் பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட பெறுபேறுகளில் யாழ்ப்பாணம் கல்வி வலயப் பிரிவில் கொக்கு வில் இந்து ஆரம்ப பாடசாலை மாண வன் தமிழ்செல்வன் கஜலக்ஸன் 198 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார். 15

## தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை சிங்களவர்களும் உணரத் தொடங்கியுள்ளனர்

### கஜேந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு



(வவுனியா)
சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை உணரத் தொடங்கி விட்டார்கள்.
இதனால் நாம் எமது பிரச்சினைகளை யும் பாதிப்புக்களையும் கோரிக்கை களையும் சிங்கள, முஸ்லிம் மக்களுக் கும் சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்தி இந்த 15

எதிர்வரும் 23ஆம் திகதி

## கோட்டா தலைமையில் சர்வகட்சி மாநாடு

(கொழும்பு)
பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக பாராளு மன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் ஆலோசனை களை பெற்றுக்கொள் ளும் நோக்கில் எதிர் 15

## 120 ரூபாயினால் டீசலின் விலை மேலும் உயரும்



(கொழும்பு)
தற்போது ஏற்பட் டுள்ள நெருக்கடி நிலை 15

நாட்டில் பெரும் நிதி நெருக்கடி

# பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை



### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

(கொழும்பு)
**நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் கட்சிக்குள் ஏற்கெனவே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.
நாட்டில் நிலவும் நிதி நெருக்கடி மற் றும் அதன் நிர்வாகம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்காமை, நாட்டின் பொருளாதார நிலை குறித்து பாராளுமன்றத்திற்கு தெரிவிக்காமை மற்றும் பதிலளிக்காமை போன்ற காரணங்களை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். 15

## யாழ்.போதனாவில் வெளிநாடு செல்பவர்களுக்கான பிசிஆர் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.போதனா வைத்திய சாலையில் வெளி நாடு செல்வர்களுக் 15

## தாய் மற்றும் மகள் மீது வேலணையில் கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)
தாய்க்கும் மகளுக்கும் கத்தி யால் குத்திய நபர், தானும் தற்கொலைக்கு முயன்ற சம்ப வம் யாழ்ப்பாணம் வேலணை பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்றது.
சம்பவத்தில் காயமடைந்த மூவரும் யாழ்.போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர் 15

## நாட்டு மக்களை நம்ப வைத்து ஏமாற்றிவிட்டார் கோட்டா

### விஜயதாச எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களை நம்ப வைத்து ஏமாற்றிவிட்டார் என ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ 15

எதிர்வரும் 30ஆம் திகதி

## யாழ்.வருகிறார் நரேந்திர மோடி

(புதுடில்லி)
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 30ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.
அவர் இந்தியா விலிருந்து விமா 15

## சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் இன்று கொழும்பு வருகை

(கொழும்பு)
இலங்கை வரும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு இன்று திங்கட்கிழமை திறைசேரி அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்த உள்ளதாக 15

## 13ஆவது திருத்தத்துக்கெதிராக வவுனியாவில் பேரணி


15

## கோட்டா இருக்கும் இடத்தை நாளை தேடிச் செல்வோம்

### பெரும் போராட்டத்துக்கு அழைப்பு

(கொழும்பு)
அரசாங்கத்தின் செயற்பாடு களுக்கு எதிராக நாளை செவ் வாய்க்கிழமை வீதியில் இறங்கி போராட ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது என அதன் பாராளுமன்ற உறுப் பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
இதன் போது 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாவின் அழைப்பை ஏற்பதா? நாளை கூடுகிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக்கூட்டம் நாளை 15ஆம் திகதி காலையில் கூட்டப்படவுள்ளது.

அன்று மாலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுடன் இடம்பெறவுள்ள சந்திப்பை புறக்கணிக்க வேண்டுமென ரெலோ எடுத்த தீர்மானம் குறித்து ஆராய இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதியின் சந்திப்பு அழைப்பை ஏற்பதில்லையென ரெலோ முடிவு செய்துள்ளது.

நிபந்தனையின் அடிப்படையிலேயே ஜனாதிபதியின் அழைப்பை ஏற்க வேண்டுமென வலியுறுத்தி, கூட்டமைப்பின் தலைவருக்கு கடிதம் அனுப்பியது.

இந்த விவகாரம் குறித்து ஆராயவே கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக்கூட்டம் கூட்டப்படவுள்ளது. (ஞா)

# நாட்டில் அரசாங்கம் ஒன்றே இல்லாதது போல் உள்ளது

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லை என்றே பொதுமக்கள் கருதுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒட்டுமொத்த நாடும் ஆபத்தை எதிர்கொண்டுள்ள நிலையில் வாழ்க்கைச் செலவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என கேள்வியெழுப்பினார்.

தேசிய நெருக்கடி ஏற்படும் போது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான திட்டத்தை வகுப்பது அரசாங்கத்தின் பணி என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தின் இயலாமை காரணமாக மக்கள் துன்பப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார். (ஞா)

# தெய்வீக சுகமளிக்கும் ஜெய ஊழியம்



சகோ. டேவிட் இரத்தினசிங்கம்

37 Fordyke Road (UK) இல் இருந்து இலங்கை வருகை தந்துள்ளார்.

நேற்று (13.03.2022) நடைபெற்ற

நினைவு அஞ்சலி திறப்பு விழா

இராஜேந்திரா ஆலயம் திறப்பு விழாவையொட்டி

14.03.2022 - 04.04.2022 வரை

ஜெய ஊழியங்கள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு:

சகோ.டேவிட் இரத்தினசிங்கம்

T.P: 074 293 3249

ஏழாலை மேற்கு, அசம்பிளி ஒப்கோட்.

கண்ணன் பாஸ்டர் 077 300 0970

குலேந்திரம் பாஸ்டர் 076 313 0127

(10621)

# ராஜபக்ச அரசாங்கத்தை துரத்தியடிக்க போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்

## ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார

நாட்டை மிகவும் மோசமான முறையில் நிர்வகித்துக் கொண்டிருக்கும் அரசாங்கத்தை துரத்தியடிப்பதற்கான போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு தலைமை வகிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கிறது. இனிமேலும் மக்கள் அமைதியாக இருப்பது நாட்டுக்கு ஆபத்தாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.


இரத்தினபுரியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையில் ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர்களாகக் காணப்படுகிறது.

எனினும் இறக்குமதி செலவு 20 பில்லியன் டொலர்களாகும். இவ்வாறான ஏற்றுமதி - இறக்குமதி இடைவெளிக்கு மத்தியில் டொலரின் பெறுமதி 270 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் பெற்றோலிய கூட்டுத்தாபனமும் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது. இலங்கை தற்போது பாரிய பொருளாதார அனர்த்தத்தினை எதிர்கொண்டுள்ளது என்றார். (ஞா)

சிவமயம்

# தசாக கிருகயக்ஞ அழைப்பு



அன்னை மடியில் 28.04.1930

ஆண்டவன் அடியில் 06.03.2022

கடந்த 06.03.2022 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத் தந்தையார்

பாரத்வாஜ கோத்திரம் பிரம்மஸ்ரீ

**மு. பாலகுருசாமி சர்மா**

அவர்களின் தசாகம் முதலான கிரியைகள் பின்வரும் திகதிகளில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி நாள்களில் அனைவரும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

- தசாகம் 15.03.2022 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி
- ஏகோதிஷ்டம், மாசிகம் 16.03.2022 புதன்கிழமை காலை
- சபிண்டீகரணம் 17.03.2022 வியாழக்கிழமை மு.ப 10.00 மணி
- கிருஹயக்ஞம் 18.03.2022 வெள்ளி பகல் 12.00 சமாராதனை

(இதனை தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.)

குடியிருப்பு, சுழிபுரம். (10619) குடும்பத்தினர்


# தூரிகை நுண்கலை வளாகம்

யாழ்வீதி, நாவலர்மடம் நெல்லியடி

மத்திய கல்லூரி வீதி நெல்லியடி

மகளிர்க்கான பயிற்சி நெறிகள்

புதிய அணிக்கான வகுப்புக்கள் ஆரம்பம்

**மார்ச்-17,18,19** திகதிகளில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்

ஆரம்பமாகும் பயிற்சி விபரம்

Make-up, Facial, Hair,
Cake Decoration, Aari Work,
Dress Making,
Fabric Painting, Art & Design,
Handy Craft



பயிற்சிகள் தொடர்பான விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

இன்று முதல் பெயர்ப் பதிவுகளை செய்து கொள்ள முடியும் - இயக்குநர்

(C-3960)




# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

## கூறுவிலை கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் தேரடி அர்ச்சனை மண்டப கட்டுமானத்திற்கான கூறுவிலை அறங்காவலர் சபையினால் கோரப்படுகின்றது. தகைமையுடையவர்கள் ஆலயத்திற்கு வருகைதந்து வேலையினைப் பார்வையிட்டு கூறுவிலை படிவக் கட்டணமான ரூபா 1000/= பணத்தினை செலுத்தி கூறுவிலைப் படிவத்தை பெற்று, பூரணப்படுத்தி 2022.03.20 ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு முன்னர் ஆலயத்திற்கு கிடைக்கக்கூடியதாக "செயலாளர், நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு" எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது கோயில் நிர்வாக பணிமனையில் வைக்கப்பட்டுள்ள "கூறுவிலை கோரல்" பெட்டியினுள் இடப்படவேண்டும்.

குறிப்பு : 1. பதிவுபெற்ற ஒப்பந்தகாரராக இருத்தல் வேண்டும்.
2. ஆலய கட்டுமான வேலைகளில் முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

இவற்றுக்கான சான்றிதழ்களின் பிரதி கூறுவிலையுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

திரு.ந.மோகனரூபன்

செயலாளர், அறங்காவலர் சபை,

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

(C-3961)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி கடந்த 10.03.2022 அன்று இறைபதமடைந்த

அமரர் திருமதி

**சந்திரவதனி ஜெகதீஸ்வரன்**



*அன்பிற்கு இலக்கணமாய் நின்றாய்*
*அனைவரையும் ஆதரித்து மகிழ்ந்தாய்*
*ஆசிரியர் சேவையிலே உயர்வாய்*
*எம்பள்ளியில் எண்ணில்லாப் பணிகளாற்றினாய்*
*அறநெறிநின்றே இறைபணி பலவும் ஆற்றினாய்*
*கொடியநோய் வந்து எமைப்பிரிய விதிவந்ததோ!*

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

யா / சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம்

(C-3963)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் தலையீட்டில் இருந்து தப்ப

## கூட்டமைப்பை பகடைக்காயாக பயன்படுத்த வேண்டாம்

## பாராளுமன்ற உறுப்பினர் வினோ தெரிவிப்பு

(வவுனியா)

**எவ்வித நிபந்தனையுமின்றி நாம் ஜனாதிபதியோடு பேச தயாராக இல்லை என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகதாரலிங்கம் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் வவுனியாவில் விளையாட்டு மைதானத்தைத் திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், நாங்கள் பல போராட்டங்களை நடத்தினால் தான் எங்களுக்குரியதை எங்களுடைய உரிமையை பெற முடியும்.

நாங்கள் போராடாமல் வீட்டுக்குள்ளே இருந்தால் எங்களுடைய உரிமையை நிச்சயமாக பெற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதி நாளை தன்னை சந்திக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

நாடு தற்போது இக்கட்டான நிலைமையில் இருந்து கொண்டு இருக்கிறது. விலைவாசிகள் விடியும் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அத்தியாவசிய பொருட்களிற்கான தட்டுப்பாடுகளும் மிக மோசமானதாக இருக்கிறது.

இந்த நாட்டை ஆள முடியாமல் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மிகவும் தடுமாறிக்கொண்டு இருக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. அவரின் தலைமையிலான அரசாங்கம் இந்த நாட்டை ஆள முடியாமல் தத்தளித்து கொண்டிருக்கின்றது.



அவரிற்கு ஆதரவாக வாக்களித்த 69 இலட்சம் மக்களும் இன்று அவரை துரத்தியடிக்க வேண்டும். அவர் இந்த நாட்டை ஆளத் தகுதி இல்லாதவர் என்று சொல்கின்ற நிலைமை உருவாகியுள்ளது. இந்த நாடு வெளி நாடுகளிலே பிச்சை எடுத்துக் கொண்டு இருக்கிறது. இனி இந்த நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் பிச்சை எடுக்கும்நிலைமையில்இருக்கிறான்.

இப்படியான நிலைமையில் நாட்டை ஆட்டங்காண வைத்து அதளபாதாளத்தில் தள்ளிவிட்டு, தான் தப்புவதற்காக இவ்வளவு காலமும் பேச முடியாத நிலைமையில் இருந்துகொண்டு ஐ.நா. மனித உரிமை பேரவையிலே கேள்வி மேல் கேள்வி தொடுக்கப்பட்டு கொண்டு இருக்கின்ற இந்த நேரத்தில் தன்னையும் அரசையும் தப்பவைப்பதற்காக எங்களோடு பேச வேண்டும் என்றுகூறப்பட்டிருக்கிறது.

இந்தியாவினுடைய தலையீட்டில் இருந்து தப்புவதற்காக எங்களை பகடைக்காயாக அரசு பயன்படுத்து வதை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள போவதில்லை என அவர் தெரிவித்தார். (நி-5-299)

# செய்முறைப்பரீட்சைப் பெறுபேறுகள் இணைய வழி ஊடாக மீளாய்வு

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சை தொடர்பான பாடங்களுக்குரிய பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பம் இணைய வழி ஊடாக மாத்திரம் சமர்பிக்கப்பட வேண்டும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி வரை இதற்கான விண்ணப்பங்களை இணைய வழி ஊடாக சமர்பிக்க முடியும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

## 54 வருடங்களின் பின்

# கொழும்பு-இரத்மலானையிலிருந்து மீண்டும் சர்வதேச விமான சேவை

(கொழும்பு)

கொழும்பு - இரத்மலானை விமான நிலையத்திலிருந்து மீண்டும் சர்வதேச விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வி சானக்க தெரிவித்துள்ளார்.

சுமார் 54 வருட இடைவெளிக்குப் பின் இந்த விமான நிலையத்தில் இருந்து மீண்டும் சர்வதேச விமானங்களை தரையிறக்க இலங்கை அரசாங்கம் தயாராகி வருகிறது.

இலங்கையின் பொருளாதாரம் சர்வதேச பயணிகளின் சுற்றுலா வருவாயை பெரிதும் சார்ந்துள்ளது. எனவே இதன் மூலம் டொலர்களை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# யாழ்.பல்கலையில் இன்று வேந்தரின் சிறப்புப் பேருரை

(குப்பிழான்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தகைசார் வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் வழங்கும் சிறப்பு பேருரை நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவத்தின் ஒரு பாகமாக குறித்த பேருரை நிகழ்வு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் "கடல்வழி வாணிபமும், வணிகப் போர்களும் அழகக்கோனாரின் எழுச்சியும்" எனும் தலைப்பில் அவர் உரை ஆற்றுவார்.

குறித்த நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் கொவிட்-19 பரம்பல் தடுப்புக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுடன் நிகழ்வில் பங்குபற்றுமாறும் யாழ்.பல்கலைக் கழக துணை வேந்தர் அறிவித்துள்ளார். (4-5-18)


யாழில் No.1 ஆங்கிலப்பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Speaking Listening
ENGLISH Foundation | ENGLISH Part-1 | ENGLISH Part-2

நேரடி வகுப்பு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
16/3/2022
பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்
Call now 0777173517



புதிய பிரிவுகள் ஆரம்பம் உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு

யாழ்ப்பாணம் Mon,Wed,Fri- 8 :00 a.m. Mon,Wed,Fri- 3:00 p.m. Sat,Sun - 3:00 p.m.
நெல்லியடி Tue,Thu - 3:00 p.m. Sat,Sun - 3:30 p.m.
சுன்னாகம் Mon,Wed,Fri- 1 : 00 p.m.
கிளிநொச்சி Sat,Sun -9:00 a.m.
சாவகச்சேரி Tue,Thu - 9:30 a.m.
சண்டிலிப்பாய் Mon,Wed,Fri- 11:30 a.m.

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
IELTS # Unique Test Tips # 40 hrs with free 4Mock exams # Latest course Material ( Book 16)
IELTS Life Skills A1 திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகாமை காளி கோவில் முன்பாக) நெல்லியடி 021 226 2470
கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) சாவகச்சேரி 021 227 0775
No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) சுன்னாகம் 021 224 1970
சீரணிச்சந்தி சண்டிலிப்பாய் 021 225 6665
No.113, A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி மைதானம் முன்பாக) கிளிநொச்சி 021 228 5655
(C-3454)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி இராசேந்திரம் தர்சிகா
இளம் கலைமாணி (BFA)



கிழக்கு பல்கலைக்கழகத்தில்.12.03.2022 அன்று நடைபெற்ற 25 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் இளம் கலைமாணி-BFA பட்டத்தைப் பெற்றுக் கொண்ட செல்வி.இராசேந்திரம் தர்சிகா அவர்களை மேலும் பல பட்டங்கள், பதவிகள், சிறப்புக்கள் பெற்று நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்தும்
பெரிய அத்தை குடும்பம் (கதிரமலை இராசமணி)
க.பவானி (மச்சி)
ஈவினை தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

Congratulations!
(10620)





பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி அனீற்ரா கோகுலதர்சன்
(Primary Trained,B.A) அவர்கள்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடந்த 05.03.2022 அன்று நடைபெற்ற 35 வது பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள்,
[illegible]
ஆனையிறவு-பளை

Congratulations!
(10612)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

திருமதி. கிறிஸ்ரோ ஜெசில்டா றுபேஷினி ரெறின் டெஸ்மன்
(BA, PGDE,M.Ed (2 nd Upper)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 04.03.2022 அன்று கல்வியியல் முதுமாணிப் பட்டம் M.Ed (2 nd Upper) பெற்ற எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி. கிறிஸ்ரோ ஜெசில்டா றுபேஷினி ரெறின் டெஸ்மன் அவர்களை மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர்வடைய பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்
(10586)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிற்கு எதிரான டெஸ்டில்
# தத்தளிக்கும் இலங்கை



இந்தியா-இலங்கை அணிகள் மோதும் இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பெங்களூரில் உள்ள சின்னசாமி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

டாஸ் வென்று முதலில் ஆடிய இந்திய அணி 252 ரன்களில் ஓல் அவுட்டானது. ஸ்ரேயாஸ் அய்யர் 92 ரன்கள் குவித்தார். விராட் கோலி 23 ரன்கள், ரிஷப் பண்ட் 39 ரன்கள், விஹாரி 31 ரன்கள் எடுத்தனர்.

இலங்கை அணி சார்பில் எம்புல்டெனியா, ஜெயவிக்ரமா தலா 3 விக்கெட்டும், தனஞ்செய டி சில்வா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, இலங்கை அணி முதல் இன்னிங்சில் களமிறங்கியது. இந்திய பந்துவீச்சாளர்களின் அசத்தலான பந்து வீச்சால் இலங்கை அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தது. அந்த அணியில் மத்யூஸ் ஓரளவு தாக்குப்பிடித்து 43 ரன்கள் எடுத்தார்.

முதல் நாள் முடிவில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்கு 86 ரன்கள் எடுத்திருந்தது. டிக்வெலா 13 ரன்னுடன் களத்தில் இருந்தார்.

இந்நிலையில், இரண்டாவது நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. மீதமுள்ள விக்கெட்களை பும்ராவும் அஸ்வினும் கைப்பற்றினர்.

இதனால் இலங்கை அணி முதல் இன்னிங்சில் 109 ரன்களுக்கு ஓல் அவுட்டானது.

இந்தியா சார்பில் பும்ரா 5 விக்கெட்டுகளையும், அஷ்வின், ஷமி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோரைவிட, இலங்கை அணி 143 ரன்கள் பின்தங்கி உள்ளது. (4-6)

# பெங்களூர் அணி கப்டனாக
# டுபிளசீஸ் நியமனம்



2022 ஐ.பி.எல் தொடருக்கான பெங்களூர் அணி கப்டனாக முன்னாள் சி.எஸ்.கே நட்சத்திரம் டுபிளசிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

2022 ஐ.பி.எல் தொடர் எதிர்வரும் 26 ஆம் திகதி வான்கடே மைதானத்தில் தொடங்குகிறது. முதல் போட்டியில் சென்னை அணி, கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

இந்நிலையில், 2022 ஐ.பி.எல் தொடருக்கான பெங்களூர் கப்டனாக டுபிளசிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு வரை சென்னை அணிக்காக விளையாடிய டுபிளசிஸை, கடந்த மாதம் நடந்த ஐ.பி.எல் மெகா ஏலத்தில் 7 கோடிக்கு பெங்களூர் அணி வாங்கியது.

டுபிளசிஸ் கப்டனாக நியமிக்கப்பட்டதன் மூலம், கோலி மீண்டும் அணித்தலைவர் பதவிக்கு திரும்புவார் என்ற ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. பெங்களூர் அணி கப்டன் பதவிக்கு டுபிளசிஸ், மக்ஸ் வெல் மற்றும் தினேஷ் கார்த்திக் இடையே போட்டி நிலவிவந்தது.

இந்நிலையில், இருவரையும் ஓரங்கட்டிவிட்டு தென் ஆப்பிரிக்க வீரர் டுபிளசிஸ் கேப்டனாகியுள்ளார். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2533

அபிராமி




கர்சிகா




விநுயா




ரவன்




அஜி




செரோன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்த[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் இல்லையேல் பேருந்து சேவைகள் தடைப்படும்

## அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு) டீசல் மானியம் வழங்கப்பட வேண்டும் அல்லது போக்குவரத்து பேருந்து சேவைக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும். இல்லையேல் பேருந்து சேவை தடைப்படும் என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கணிசமான வீழ்ச்சியடைந்ததை அடுத்து இலங்கையில் எரிபொருள் கட்டணங்கள் கடுமையாக அதிகரிக்கப்பட்டுள்ளன.


இந்நிலையில் மானியம் வழங்கப்படாவிட்டால் பேருந்து கட்டணத்தை கடுமையாக அதிகரிப்பது தவிர்க்க முடியாது.

மானியம் வழங்கப்படாவிட்டால், 15 வீதம் பேருந்து கட்டண உயர்வு அவசியம் எனவும் அச் சங்கம் எச்சரித்துள்ளது. (ஙி-5)

# மரண அறிவித்தல்

## வேலாயுதன் ஸ்ரீதயாபரன்

(Manager Future Life Investment Limited.Nelliady)



நெசவு வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக்கொண்ட வேலாயுதன் ஸ்ரீதயாபரன் (முகாமையாளர், Future Life Investment Limited நெல்லியடி) அவர்கள் 12.03.2022 சனிக்கிழமையன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் வயிரன் வேலாயுதன் (ஓய்வுநிலை ஆரம்ப பிரிவுப் பகுதித்தலைவர் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), தெய்வானை (ஓய்வு நிலை ஆசிரியை இமையாணன் அ.த.க. பாடசாலை) அவர்களின் புத்திரனும் தேவமனோகரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி) அவர்களின் அன்புக் கணவரும் டிலன்ஜா அவர்களின் பாசமிகு தந்தையும் ஸ்ரீதரன் (ஜேர்மனி), ஸ்ரீசாயிசங்கர் (ஜேர்மனி), ஸ்ரீதயாபரி (ஆசிரியை, கொழும்பு), ஸ்ரீசண்முகப்பிரியா (சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புச் சகோதரனும் ஜெயசீலன் (மொழிபெயர்ப்பாளர், அரச கரும மொழிகள் திணைக்களம்), அசோகரட்ணம் பொறுப்பதிகாரி மதுவரித்திணைக்களம் ஆகியோரின் அன்பு மைத்துனனும் வைஷ்ணவி (மாணவி) யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) யின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 14.03.2022 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(10617)

நெசவு வீதி,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 . 02 . 1959



மறைவு
05 . 03 . 2020

## அமரர். செல்லையா சிவதாசன்

[சன்லைற் டிறைகிளீனர்ஸ் முகாமையாளர் [யாழ்ப்பாணம், கச்சேரி]

சிறு வலியும் தெரியாமல் நாமும் வளர்ந்தோம்
இன்று உயிர் பிரியும் வலியை நாமும் உணர்ந்தோம்

உம்முள் அத்தனை அன்பு எம்மிடம் சொல்லாமலே
மறைந்திருக்கும் எத்தனை துயர் வந்தும்
எமக்குச் சொல்லாமலே தாங்கியிருக்கும்

நீர் எமக்காக செய்தவை பலகோடி
இன்று உம் பிரிவில் தவிக்கின்றோம் உம்மைத் தேடி
நீர் இழந்தவை பல எமக்காக
இங்கு நாம் அழுகின்றோம் தினம் உமக்காக

செல்வம் கோடி வந்தாலும் உமக்கு எதுவும் நிகரில்லை
தந்தை உம் புகழ் பாட எமக்கு இங்கு வரி இல்லை.

புங்கன் குளம்,
அரியாலை.

(10608)

குடும்பத்தினர்.

# இராசிபலன்

14.03.2022
மாசி 30, திங்கட்கிழமை
ஏகாதசி முற்பகல் 11.48.மணிவரை

பூரம் முன்னிரவு 9.52 மணிவரை
சுபநேரம் - 12.21- 1.51 மணிவரை
இராகுகாலம் -7.51-9.21 மணிவரை

ஏகாதசி விரதம்,
காரடையா நோன்பு
சந்திராஷ்டமம்- மூலம், பூராடம்.

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளினால் உற்சாக மடைவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருட்களைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

**கடகம்** தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்களினால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.

**துலாம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், நல்ல காரியங்கள் நடைபெறும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** அரசு வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** திடீரென கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வந்து சேரும், பூர்வீக சொத்துக்களில் நன்மையுண்டு. எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று செய்பவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** உறவினர் வழியில் சுபசெய்திகள் வந்து சேரும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பொன்னான நாள், தன வரவு திருப்திகரமாக அமையும்.

**கன்னி** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பிறர் உதவியுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அர்ப்பத்தனமாக நடந்து கொள்வர், பயணத்தால் மன உழைச்சல் ஏற்படலாம், காரிய வெற்றிக்கு கடுமையாக உழைக்க வேண்டிய நாள்.

**மீனம்** அரைகுறையில் இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபமாய் பேசுபவரை அமைதியாய் வென்று விட வேண்டும்.

# சிறுவர் பாதுகாப்புப் பற்றி நாமே வரைவோம் சித்திரப்போட்டி

## பரிசில் பெறுவோர் விபரம்

யாழ்.மருத்துவ சங்கமும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து நடாத்திய "சிறுவர் பாதுகாப்பு பற்றி நாமே வரைவோம்" தலைப்பிலான சித்திரப்போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

**வடக்கு மாகாண ரீதியாக பரிசில் பெறுபவர் விபரம்**

முதலாம் இடம்-சு.அபிஷயன் - யா /அல்வாய் அம்பாள் வித்தியாலயம், இரண்டாம் இடம்- ஞா.கனிஸ்கா - யா/கரணவாய் தாமோதர வித்தியாலயம், மூன்றாம் இடம்- யோ.கார்த்திகாஜினி - யா /பிளவத்தை அ.மி.த.க பாடசாலை.

**பிரிவு-9-11**

முதலாம் இடம்-செ.மெல்கிடெக்ஷன்- யா/ ஹாட்லிக் கல்லூரி ,இரண்டாம் இடம் ,கு.சாரங்கன்- யா / தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், மூன்றாம் இடம் ரா.சஞ்ஜனா-யா / திருக்குடுப்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை

**பிரிவு-12-14**

முதலாம் இடம்-சு.ரதிகா- யா / இந்து மகளிர் கல்லூரி ,இரண்டாம் இடம் பா.கோநிலவன்-யா/ ஹாட்லிக் கல்லூரி, மூன்றாம் இடம் -சு.றிசானா -யா /நடேஸ்வரா கல்லூரி

**பிரிவு-15-16**

முதலாம் இடம் -அ. சுபா -யா /நடேஸ்வரா கல்லூரி , இரண்டாம் இடம் ஜெ.கிரிதாஸ் -வ / மதியமடு விவேகானந்தா வித்தியாலயம் ,மூன்றாம் இடம் ச.ரணயன் - கிளி /திருவையாறு மகா வித்தியாலயம்.

**கல்வி வலய ரீதியாக பரிசில் பெறுபவர் விபரம்**

**பிரிவு 5-8**

**யாழ் மாவட்டம்- வடமராட்சி கல்வி வலயம்**

முதலாம் இடம்- அ.அபிஷாந் யா/வட இந்து ஆரம்பப் பாடசாலை, இரண்டாம் இடம்-தி. சஸ்வின்- யா பொலிகண்டி இந்து ஆரம்பப் பாடசாலை ,மூன்றாம் இடம் ஞா.கனிஸ்கா-யா /கரணவாய் தாமோதர வித்தியாலயம் ,மூன்றாம் இடம் சு.அபிஷயன்-யா /அல்வாய் அம்பாள் வித்தியாலயம்

**வலிகாமம் கல்வி வலயம்**

முதலாம் இடம் - யோ.கார்த்திகாஜினி- யா/ பிளவத்தை அ.மி.த.க பாடசாலை, இரண்டாம் இடம் யோ.தரங்கினி - யா / சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை , மூன்றாம் இடம்- க.அக்ஷயா யா / இணுவில் மத்திய கல்லூரி

**தென்மராட்சி கல்வி வலயம்**

முதலாம் இடம்- கி.சர்மிஜா- யா/கல்வாய் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலம் ,இரண்டாம் இடம்- நி. மபிஷா-யா /மறவன்புலொ சகலகலாவல்லி வித்தியாலயம் ,மூன்றாம் இடம்-ர. துசாந்த் -யா/ மறவன்புலொ சகலகலாவல்லி வித்தியாலயம்

**தீவக கல்வி வலயம்**

முதலாம் இடம்- மெ.ஸோதிலா- யா/ஊர் புனித மரியாள் றோ.க.மகளிர் வித்தியாலயம் ,இரண்டாம் இடம் - கே.சரண்சிகா-யா /நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம் , மூன்றாம் இடம்.வி.சாதித்தியா, யா/ வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், மூன்றாம் இடம்-ச.பிரியந்தன் யா / நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம்

**யாழ்ப்பாண கல்வி வலயம்**

முதலாம் இடம்- ம.இஷா யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம்-ம.மதுசிகா -யா/உடுப்புலம் குணபாலன் வித்தியாலயம், மூன்றாம் இடம்-ஞா. யஸ்வினி யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

**கிளிநொச்சி மாவட்டம் -வடக்கு கல்வி வலயம்**

முதலாம் இடம்- கௌ.யுவணன், கிளி/ தருமபுரம் இல-01 அ.த.க. பாடசாலை

**வவுனியா மாவட்டம் - வடக்கு கல்வி வலயம்**

முதலாம் இடம் பா.அஸ்வின்யா வ/சுந்தரபுரம் அ.த.க பாடசாலை

**வவுனியா மாவட்டம் - தெற்கு கல்வி வலயம்**

முதலாம் இடம் லோ.டினோஜன் வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் , இரண்டாம் இடம் வி.நிஷ்ணுகா- வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், மூன்றாம் இடம்-பா.ராகவன் -வ /நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், மூன்றாம் இடம்-சி. சர்வினி -வ/இறம்பைகுளம் மகளிர் மகா வித்தியாலயம்

**முல்லைத்தீவு மாவட்டம்- துணுக்காய் கல்விவலயம்**

முதலாம் இடம்- க.கவிஷனன் மு/மாமடு பழம்பாசி- அ.த.க பாடசாலை, இரண்டாம் இடம்- ச.நதுஷா-மு/கூழாமுறிப்பு- அ.த.க. பாடசாலை ,மூன்றாம் இடம் உ.அபர்ணிகன்-மு /மாமடு பழம்பாசி அ.த.க பாடசாலை

**மன்னார் மாவட்டம்-மன்னார் கல்வி வலயம்**

முதலாம் இடம் K.ஷிஹ்ரா மன் /அல்/அஸ்கார் மகாவித்தியாலயம், இரண்டாம் இடம்-S.பாத்திமா சதா மன் /அல் /அஸ்கார் மகாவித்தியாலயம், மூன்றாம் இடம்- முகமட் ஜாஹித் முகமட் அக்மல் மன் / அல்/அஸ்கார் மகா வித்தியாலயம்

**கல்வி வலய ரீதியாக பரிசில் பெறுபவர் விபரம்**

**பிரிவு 9-11**

**யாழ் மாவட்டம்- வடமராட்சி கல்வி வலயம்**

முதலாம் இடம் செ. மெல்கிடெக்ஷன் யா/ ஹாட்லிக் கல்லூரி ,இரண்டாம் இடம் -க. ஷவிஸ்ணு- யா /தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ,மூன்றாம் இடம்-டே. பிலெஸ்ஷின்- யா/ ஹாட்லிக் கல்லூரி

**வலிகாமம் கல்வி வலயம்**

முதலாம் இடம்- கு.சாரங்கன் ,யா/தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், இரண்டாம் இடம்-சு.றூபிகா யா மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் , மூன்றாம் இடம் -வ.லாவணியா யா/சங்கானை ஸ்தான அ.த.க. பாடசாலை

**தென்மராட்சி கல்வி வலயம்**

முதலாம் இடம் - ஜெ.கஜீபன் - யா/சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை, இரண்டாம் இடம், நி.மதுஷ்ரா யா /இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை, மூன்றாம் இடம்,அ.யுகேஸ், யா/நாவற்குழி மகாவித்தியாலம்

(தொடரும்)

# பாடசாலை ஆசிரியர் மீது மாணவனின் உறவுகள் தாக்குதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-மீசாலைப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் மீது மாணவன் ஒருவரின் உறவுகள் நடத்திய தாக்குதலினால் ஆசிரியர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

ஆசிரியரின் வீட்டுக்குச் சென்ற மாணவனின் உறவுகள் ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தியதில் ஆசிரியர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் மாணவனுடைய பெற்றோர் ஆசிரியர் மீது பொலிஸ் முறைப்பாடு வழங்கியிருக்கும் அதே வேளையில்தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியரும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும்கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு துன்னாலை இந்திரன் கண்ணகை அம்மன் கோவிலின் பிரதம பிரதம குருக்கள் சிவஸ்ரீசி. இந்திரராஜக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்புச் செய்யப்படும். (4-6)

# கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் மின் கம்பத்துடன் மோதியது



(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் நேற்று முன்தினம் ஹயஸ் வான் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

எனினும் இச்சம்பவத்தில் எந்த உயிர்சேதமும் ஏற் படவில்லை. வானின் சில்லு காற்று குறைந்ததால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன்மோதியுள்ளது எனதெரிவிக்கப்பட்டுள்ளது.(4-5-33-104)

# மருத்துவ உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொல்புரத்தில் அமைந்துள்ள ஆரம்ப மருத்துவப் பிரிவு மருத்துவமனையில் மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறை நீண்ட காலமாக நிலவிவருகிறது.

இதனைத் தீர்க்கும் முகமாக தொல்புரம் ஆரம்ப மருத்துவப்பிரிவு நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் வெளிநாட்டு உறவுகளின் நிதிப் பங்களிப் புடன் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மருத்துவமனைக்கு கையளிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர். வி.குருபரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர். ஏ. கேதீஸ்வரன் பிரதம விருந் தினராக கலந்து கொள்வார். (4-5)

# பாராட்டு விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

இலக்கிய கலாநிதிப் பட்டம்'வழங்கிக் கௌரவிக்கப்பட்ட தகைசார் பேராசிரியர் சி.தில்லைநாதனின் பாராட்டுவிழாவும், அவரது "நிற்பனவும் நிலைப்பனவும் "எனும் நூல் வெளியீட்டுவிழாவும் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அதிபர் [illegible] தலைமையில் நடைபெறும். (4-5)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையக் கட்டடத்தில் இடம் பெறவுள்ளது என சனசமூக நிலையத்தின் தலைவர். ச. நிரோஷிகன் அறிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வரையறுக்கப்பட்ட பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பளை.
# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19 ஆம் திகதி 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ,இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" ,இற்கு அமைய கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் திரு.சம்சுதின் முகம்மது சுபைர் ஆகிய நான் 20.02.2020 ஆம் திகதி 2163/27 ,இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 ,இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக ,இந்தக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராக கடமையாற்றுவதற்கும் பின்வரும் உத்தியோகத்தர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- ❖ இதற்கமைய இந்தக் கூட்டங்களிற் சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளைப்பொதுச்சபைக்கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- ❖ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவுக்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது ,இருவராவது (02) 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ❖ சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பதுபேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.
- ❖ இரண்டு அங்கத்தவர்கள் அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- ❖ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.
- ❖ கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கு வாக்களிக்கத் தகுதியுடைய உறுப்பினர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரால் 19.05.1998 ஆம் திகதி 1028/06 ,இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய கூட்டஅறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அறிவித்தல் கிடைக்காத வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களும் இவ்வறிவித்தலை தனிப்பட்டஅறிவித்தலாக கருதி அன்றைய கூட்டத்திற்கு சமூகமளித்துத் தங்கள் ஜனநாயக உரிமையை பயன்படுத்தி கூட்டுறவு அமைப்பினை ஜனநாயக ஆளுமை கொண்டதாக செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்**

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் இடமும் 19.03.2022 சனிக்கிழமை**

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி, நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | 01 | பளை | திருமதி.பி.கவிதா லோறன்சியா | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/பளை மத்தியகல்லூரி |
| 02 | 02 | மாசார் | திரு.ப.சஞ்சீவன் | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/மாசார் அ.த.க.பாடசாலை |
| 03 | 03 | முள்ளிப்பற்று | திரு.க.சசிகரன் | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை |
| 04 | 04 | சோரன்பற்று | திரு. தே.வேணுகோபாலன் | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/சோரன்பற்று கணேசாவித்தியாலயம் |
| 05 | 05 | புலோப்பளை | திரு.வ.நிதர்சன் | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை |
| 06 | 06 | இத்தாவில் | திரு.பெ.பவளராஜ் | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க பாடசாலை |
| 07 | 07 | முகமாலை | திரு.பா.வாகீசன் | 19.03.2022சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/முகமாலை றோ.க.த.க.பாடசாலை |
| 08 | 09 | கிளாலி | திரு.பா.ரூபராஜ் | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/கிளாலி றோ.க.த.க.பாடசாலை |
| 09 | 10 | புலோப்பளை கிழக்கு | திரு.நா.ஜெயவதனன் | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/புலோப்பளை றோ.க.த.க.பாடசாலை |
| 10 | 11 | அல்லிப்பளை | திரு.அ.பிரமிலன் | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/அல்லிப்பளை சி.சி..த.க.பாடசாலை |
| 11 | 12 | கச்சார்வெளி | திரு. ப.றோய்டனிஸ்ரன் | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கச்சார்வெளி பொதுநோக்குமண்டபம் |
| 12 | 13 | தம்பகாமம் | திரு.க.சுரேஸ்பாபா | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கலைமகள் முன்பள்ளி தம்பகாமம் |
| 13 | 14 | சங்கத்தார்வயல் | திரு.ம.லெட்டினன் | 19.03.2022 சனிக்கிழமை மு.ப 10 மணி | கிளி/கோயில்வயல்அ.த.க. பாடசாலை |

**ஒப்பம்**
**திரு.சம்சுதின் முகம்மது சுபைர்,**
**கூட்டுறவுஅபிவிருத்திஉதவிஆணையாளர்,**
**கிளிநொச்சி.**

(அ-3953)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய ஸ்ரீஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் 9.30 மணி வரை இடம் பெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் நாளை செவ்வாய்க் கிழமை காலை-6 மணிக்கு ஆரம்பமாகும். எண்ணெய்க் காப்பு நாளை மறுதினம் புதன் கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். (4-5-18)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலக நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல். பிற்பகல் ஒரு மணிவரை மேற்படி பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறும்.

குறித்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5-18)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான் தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் நாவலர் ஆண்டில் நடந்தும் மாதாந்த பௌர்ணமி விரதகால சிறப்புச் சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (4-5)

# செயற்குழுக் கூட்டம்

(குப்பிழான்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியால யத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது

பரீட்சை சம்பந்தமான விடயங்கள், பட்டமளிப்பு விழா மற்றும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் எதிர் காலச் செயற்பாடுகள், தீர்மானங்கள் தொடர்பான முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்து நிர்வாகச் செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.(4-5-18)

# மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது

(கரணவாய்)

அனுமதிப்பத்திரமின்றி அதிகளவு மதுபானப் போத்தல்களை எடுத்து சென்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.நேற்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி நகர்ப்பகுதியில் பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சனா விமலவீர தலைமையிலான பொலிஸ் குழுவினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் போது 180ml அளவுடைய 50 மதுபான போத்தல்களை எடுத்து சென்ற வரணிப் பகுதியை சேர்ந்தவரே கைது செய்யப்பட்டவராவார். விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(4-5-60)

# பாரதம்

## 81 கைதிகளுக்கு ஒரே நாளில் மரண தண்டனை

# நிறைவேற்றியது சவுதி அரேபியா

(றியாத்)

**ஒரே நாளில் 81 ஆண் கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றியுள்ளது சவுதி அரேபியா. ஏமன் மற்றும் ஒரு சிரிய நாட்டவர் உட்பட 81 பேருக்கே நேற்று முன்தினம் மரண தண்டனை விதிக்கப்பட்டது.**




1979 ஆம் ஆண்டு மக்காவில் உள்ள பெரிய மசூதியைக் கைப்பற்றியதாக குற்றம் சாட்டப்பட்ட 63 கிளர்ச்சியாளர்களுக்கு 1980 ஆம் ஆண்டு ஜனவரியில் சவுதி நிறைவேற்றிய மரண தண்டனையே இது வரை ஒரே நாளில் நிறைவேற்றப்பட்ட அதிக மரண தண்டனையாக பதிவாகியிருந்தது.

இந்நிலையில் அதனை முறியடிக்கும் வகையில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 81 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அல்கொய்தா, ஐ.எஸ். மற்றும் ஹவுத்தி தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் உட்பட பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள், கொலை உள்ளிட்ட பல்வேறு கொடூர குற்றங்களில் ஈடுபட்டவர்களே தூக்கிலிட்டதாக சவுதி அரச செய்தி நிறுவனமான எஸ்.பி.ஏ. தெரிவித்துள்ளது.

அதிக எண்ணிக்கையில் மரண தண்டனை விதிக்கும் நாடுகளின் பட்டியலில் சவுதி அரேபியா ஐந்தாவது இடத்தில் உள்ளது. இந்த பட்டியலில் முதல் நான்கு இடங்களில் சீனா, ஈரான், எகிப்து மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் உள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. (நி-5)

# குதிரை வால் சடைக்கு தடை

## ஜப்பானில் விநோதம்

(டோக்கியா)



ஜப்பானில் உள்ள மாணவிகள் பாடசாலைக்கு குதிரை வால் (Ponytails) வகை சிகையலங்காரத்தில் வருவதற்கு தடை விதித்துள்ளது.

குதிரை வால் வகை சடை, ஆபாசத்தை தூண்டும் விதமாக இருப்பதாக ஜப்பானில் பாடசாலைகளில் தடை செய்யப்பட்டுள்ளது.

இது போன்ற விநோதமான விதிகள் ஏற்படுத்தப்படுவது ஜப்பானில் இது முதல் முறை அல்லவென்றாலும் இந்த தடைக்கு அங்கு பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது. (நி-5)

# தொடரும் காட்டுத் தீ

## புகைமூட்டமாகும் கொடைக்கானல்



(புதுடில்லி)

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வனப்பகுதியில் நேற்று மூன்றாவது நாளாக காட்டுத்தீ கொழுந்துவிட்டு எரிந்து வருகிறது.


குறித்த காட்டுத்தீயால், சுமார் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலான மரங்கள், அரியவகை மூலிகை செடிகள் தீயில் கருகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காட்டுத்தீயை அணைக்க வனத்துறையினர் முயற்சி செய்து வரும் அதேவேளை காற்றின் வேகம் காரணமாக தீ வேகமாக பரவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காட்டுத்தீ காரணமாக தோகை வரை, மச்சூர், உள்ளிட்ட பகுதிகள் புகை மண்டலமாக காட்சியளிக்கின்றன. (நி.5)

# ரயில் தடம் புரண்டு 60 பேர் உயிரிழப்பு

## சுமார் 50 பேர் படுகாயம்

## கொங்கோவில் துயரம்



(கின்சாஸா)

கொங்கோ நாட்டில் சரக்கு ரெயில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் 60 பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர்.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசில் போதிய பயணிகள் ரயில், சாலை போக்குவரத்து சேவைகள் இல்லாமல் மக்கள் சரக்கு ரயில்களில் பயணிக்கும் சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், அந்நாட்டின் லுயென் மாகாணத்தில் இருந்து டென்கி நகருக்கு சரக்கு ரயில் ஒன்று நேற்று புறப்பட்டது. சரக்கு ரயிலாக இருந்த போதும் அதில் 100-க்கும் மேற்பட்டோர் பயணித்தனர்.

பைஆஃப்வி என்ற கிராமம் அருகே பயணித்த போது ரயில் திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 60 பேர் உயிரிழந்தனர். மேலும், 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி-5)

# அமெ

# அது

(வோஷிங்டன்)

**உக்ரைன் போரில், ரஷ்**

**அது மூன்றாம் உலகப்**

**எச்சரித்துள்ளார்.**

ஆகவே உக்ரைனில், ரஷ்யாவுக்கு எதிரான போரில் தமது நாடு நேரடியாக தலையிடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனில் அமெரிக்காவின் உயிரியல் ஆயுதங்கள் கையா

# ஈராக்கில் உ

# ஈரான் ஏ

(டெஹ்ரான்)

வடக்கு ஈராக்கில் உள்ள அமெரிக்க தூதரகம் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

டமாஸ்கஸ் பகுதி அருகே இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் புரட்சிப் படையைச் சேர்ந்த இருவரை சிரியா கொலை செய்த சில நாட்களுக்குப் பிறகு இந்த தாக்குதல் நடந்துள்ளது.

ஈராக்கின் வடக்கு நகரமான இர்பிலில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை நோக்கி சுமார் ஆறு ஏவுகணைகள் ஏவப்பட்டதாக ஈராக்- அமெரிக்க பாதுகாப்பு

# உக்ரைனுக்கு செல்

# ஆயுத வாகன

## ரஷ்ய

(மொஸ்கோ)

அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் ரஷ்ய படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக ஏராளமான ஆயுதங்களை உக்ரைனில் குவித்து வருகின்றன.

உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன. இந்தநிலையில் மேற்கத்திய நாடுகளுக்கு ரஷ்யா கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இதுகுறித்து ரஷ்யாவின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் கூறியதாவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரிக்கா களமிறங்கினால் மூன்றாம் உலகப்போர்!


## எச்சரிக்கிறார் ஜோ பிடன்

...ஷ்ய படைகளுக்கு எதிராக அமெரிக்க படைகள் போரிடுமாயின், ...ப் போரைக் குறிக்கும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன்

...எப்படுவதாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ரஷ்யா குற்றம் சாட்டிய நிலையில், ஜோ பிடன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நேட்டோ பிரதேசத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் ஒன்று பட்ட நேட்டோவின் முழு பலத்துடன் பாதுகாப்போம் என்றும் உக்ரைனில் இருந்து ரஷ்யாவுக்கு எதிராக போரிட மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.


அத்துடன் நேட்டோவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நேரடி மோதல், மூன்றாம் உலகப் போரைக் குறிக்கும் என்றும் அவர் எச்சரித்தார். (நி-5)



# ...உள்ள அமெரிக்க தூதரகம் மீது ...வுகணைத் தாக்குதல்

அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த ஏவுகணைகள் அண்டை நாடான ஈரானில் இருந்து ஏவப்பட்டன என்றும், ஏவுகணைகள் கட்டடத்தை தாக்கியதாகவும் ஆனால் இதில் உயிரிழப்புகள் எதுவும் இல்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, டமாஸ்கஸ் பகுதி அருகே இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் புரட்சிப் படையைச் சேர்ந்த இருவரை சிரியா கொலை செய்த சில நாட்களுக்குப் பிறகு இந்த தாக்குதல் நடந்துள்ளதாக கூறப்படுகிறது.



இதற்கு கண்டனம் தெரிவித்த ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சகம் பழிவாங்கப்படும் என்று உறுதியாக தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## உக்ரைன்-ரஷ்யா போரை நிறுத்துமாறு பாப்பரசர் பிரான்சிஸ் மீண்டும் கோரிக்கை

(வத்திக்கான்)

பாப்பரசர் பிரான்சிஸ் போரை உடனடியாக நிறுத்துமாறு மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் தொடங்கி நேற்றுடன் 18 நாட்கள் நிறைவடைந்த நிலையில் ஏராளமான பொது மக்களும், படைவீரர்களும் உயிரிழந்துள்ளனர்.

குறித்த போரை நிறுத்தவும், சமரச பேச்சில் ஈடுபடவும் ஐ.நா சபை கோரிக்கை விடுத்தது. அதே போல பாப்பரசர் பிரான்சிஸும் போரை நிறுத்த வேண்டுகோள் விடுத்தார். பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோளை ரஷ்யா ஏற்கவில்லை. நேற்று முன்தினம் உக்ரைன் மீது கடுமையான தாக்குதலை நடத்தியது. இதில் குழந்தைகள் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதையடுத்து இது தொடர்பாக அவர் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளதாவது, போரினால் குழந்தைகள் பலியாவதை ஒருபோதும் ஏற்க முடியாது. குழந்தைகளின் எதிர்காலம், அவர்களின் பெற்றோர் உயிரிழந்தால், குழந்தைகள் அனாதைகளாகும் நிலை, ஆகியவற்றைப் பற்றிச் சிந்தியுங்கள்.

இந்த சிந்தனை உருவானால் போர் நிறுத்தத்திற்கு வழிபிறக்கும். எனவே கடவுளின் பெயரால் போரை நிறுத்துங்கள். அதற்கான ஏற்பாடுகளை தொடங்குகள் என குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# ...ல்லும் மேற்கத்திய நாடுகளின் ...னங்களை தாக்குவோம் ...யா எச்சரிக்கை



அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் ரஷ்ய படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக ஏராளமான ஆயுதங்களை உக்ரைனில் குவித்து வருகின்றன. இது மிகவும் ஆபத்தான செயல்.

அதுபோன்று ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள், ரஷ்ய ராணுவத்தின் சட்டப்பூர்வ தாக்குதலுக்கு இலக்குகள் என்பதே மேற்கத்திய நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## ரசாயன ஆயுதங்களை தடை செய்ய வேண்டும்

### ஐ.நா சபையில் இந்தியா வலியுறுத்தல்

(நியூயோர்க்)

ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே நடந்து வரும் நேரடி பேச்சுவார்த்தை போர் நிறுத்தத்துக்கு வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என ஐ.நா சபையில் இந்தியா தெரிவித்துள்ளது.

உக்ரைனில் ரசாயன ஆயுதங்கள் அமெரிக்கா உதவியுடன் தயாரிக்கப்படுவதாக ரஷ்யா குற்றம் சாட்டியது. அது தொடர்பாக விவாதிக்க ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தை கூட்ட வலியுறுத்தியது.

அதன்படி நேற்று முன்தினம் ஐ.நா. பாதுகாப்பு சபையில் கூட்டம் நடந்தது. அப்போது உக்ரைன் உயிரியல், ரசாயன ஆயுதங்களை உருவாக்குகிறது என்ற ரஷ்யாவின் குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரமும் இல்லை என்று ஐ.நா.சபை தெரிவித்தது.

இக்கூட்டத்தில் ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி டி.எஸ்.திருமூர்த்தி பேசியதாவது,

உயிரியல், ரசாயன ஆயுதங்களை தடை செய்யும் ஒப்பந்தத்துக்கு கீழ்படியுமாறு அனைத்து நாடுகளுக்கும் இந்தியா அழைப்பு விடுத்தது. உயிரியல் மற்றும் நச்சு ஆயுதங்களை முழுமையாக தடை செய்யப்படுவதை அனைத்து நாடுகளும் உறுதி செய்ய வேண்டும்.

உக்ரைனில் நிலவும் மனிதாபிமான நிலை குறித்து இந்தியா கவலை அடைந்திருக்கிறது. ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே நடந்து வரும் நேரடி பேச்சுவார்த்தை போர் நிறுத்தத்துக்கு வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். போர் நிறுத்தத்துக்கு பேச்சுவார்த்தை தவிர வேறு வழியில்லை.

ஐ.நா சாசனம் மற்றும் சர்வதேச சட்டத்தின் கொள்கைகளை கடைபிடிக்க வேண்டும். நாடுகளின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டையும் அனைத்து நாடுகளும் மதிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் தன்னிச்சையான முடிவே

# நாட்டின் நிலைக்கு காரணம்

## சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு

(முறிகண்டி)

**சரியான பொருளாதார ஆலோசகர்களின் கருத்துக்களை இந்த அரசாங்கமும், ஜனாதிபதியும் கேட்காமல் இராணுவ பிரசன்னத்துடனும், இராணுவத்தளபதிகளை நியமனம் செய்து தனது அமைச்சுக்களை நடத்தியதன் விளைவு இந்த நாடு அதளபாதாளத்திற்குள் போனது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ் சிறீதரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் இடம்பெற்ற பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்க கோரி மக்களின் கையெழுத்து பெறும் நிகழ்வில் கலந்துகொண்டு பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்விடயத்தினை தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று இலங்கை அரசாங்கம் பல்வேறுபட்ட நெருக்கடிகளை மக்களிற்கு கொடுத்திருக்கின்றது மிக முக்கியமாக நாட்டின் பொருளாதாரம் பாதாளத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கி ன்றது.

மக்கள் அன்றாட சீவியங்களை நடத்த முடியாதவர்களாக மாறியிருக்கின்றார்கள். எரிபொருட்களின் விலை உச்சத்தை தொட்டிருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை சீராக கொண்டு செல்வதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பேசி ஒரு நிலைப்பாட்டுக்கு வாருங்கள் என கட்சி தலைவர்கள், நிபுணர்கள் என பலரும் கோரியிருந்தனர். ஆனால் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல மாட்டோம், அவர்களுடன் பேசமாட்டோம் என்று சொன்ன அரசாங்கம் இப்பொழுது சர்வதேச நாணய நிதியத்தின் கதவைத் தட்டுகிறது எனத் தெரிவித்தார். (4-5-100)



தமிழக திருக்கைலாச மரபு பேரூர் ஆதீனம் முனைவர் தவத்திரு மருத்தாச்சலம் அடிகளார் தமிழ்ச் சைவப் பேரவை, சைவ மகா சபையினரை கீரிமலை சிவபூமி ஆச்சிரமத்தில் சந்தித்து கலந்துரையாடினார். (படம் : சிவசாந்தன்)

# மதுபான போத்தல்கள் வைத்திருந்தவர் கைது

(பனிக்கன்குளம்)

நட்டாங்கண்டல் பகுதியில் அதிகளவு மதுபான போத்தல்களை உடமையில் வைத்திருந்து விநியோகித்த குற்றச்சாட்டில் நட்டாங்கண்டல் பகுதியை சேர்ந்த 38 வயதான குடும்பஸ்தர் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

நட்டாங்கண்டல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ். ரத்னநாயகவிற்கு நட்டாங்கண்டல் பொலிஸ் நிலைய விசேட புலனாய்வு பொலிஸார் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றது.

கைதான சந்தேக நபரிடம் இருந்து 62 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபரை பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது. குறித்த வழக்கு நாளை மறுதினம் புதன்கிழமை மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெறும் என பொலிஸார் தெரிவித்தனர். (4-5-281)

# விளையாட்டு மைதானம் திறந்து வைப்பு

(நெளுக்குளம்)

வவுனியா சிறிநகரில் ரெட்ஸ்ரார் விளையாட்டு மைதானம் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் விளையாட்டு போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன . இப்பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையான குறித்த விளையாட்டு மைதானம் கடந்த 25 வருடங்களாக பல்வேறு தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

இங்குள்ள வீரர்கள் பயிற்சிகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களையும், அசௌகரியங்களையும் எதிர் நோக்கி வருவதாக தெரிவித்து கடந்த காலங்களில் போராட்டங்களையும் முன்னெடுத் தனர்.

இந்நிலையில் அவர்களுக்குத் தேவையான விளையாட்டு மைதானம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகதாரலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டு திறமைகளை வெளிப்படுத்திய வீரர்களுக்கு பரிசில்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. (4-5-299)



# செயற்கை கால் பொருத்தும் முகாம் யாழில் நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் இலவச முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் வலுவிழந்தோருக்கு சேவை செய்யும் பகவான் மகா வீரர் சஹயட சமித்தி நிறுவனமும்- யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அலுவலகமும் இணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த இச்சேவை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும்.

ஆரம்ப நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதர் ராகேஷ் நடராஜ், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர க.மகேசன், இந்தியத் தூதரக அரசியல் ஆலோசகர் பானு பிரகாஷ், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் முரளிதரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

குறித்த சேவையைப் பெற விரும்புவோர் தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக பதிவுகளை மேற்கொண்டு சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும். (4-5-30-33)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 100 | 130 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 380 | 500 |
| தக்காளி | 250 | 220 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 100 | 80 |
| கோவா | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 200 | 300 | 300 | 350 |
| பூசணி | 120 | 140 | 120 | 150 |
| புடோல் | 200 | 150 | 180 | 140 |
| வாழைக்காய் | 60 | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 140 | 180 | 250 |
| பெரிய வெங்காயம் | 130 | 150 | 140 | 200 |
| பாகற்காய் | 350 | 350 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 140 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 160 | 150 | 200 |
| லீக்ஸ் | 180 | 140 | 160 | 200 |
| பீற்றூட் | 180 | 150 | 150 | 180 |
| கறிமிளகாய் | 250 | 300 | 250 | 240 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 1200 | 1400 |
| போஞ்சி | 280 | 250 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 160 | 160 | 160 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 80 | 100 |
| தேசிக்காய் | 100 | 120 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 150 | 180 | 180 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 160 | 280 |
| முள்ளங்கி | 50 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 30 |
| ஈரப்பலா | - | 130 | 120 | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் குடிநீர் கட்டணத்திற்கு இனி அரசாங்கம் நிதியுதவி வழங்காது

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

அரச பாடசாலைகளின் குடிநீர் கட்டணத்தை பெற்றோர்கள் செலுத்த வேண்டியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த ஆண்டு முதல் குடிநீர் கட்டணத்திற்கு அரசு நிதி வழங்காது என அனைத்து பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக, சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதனால், பாடசாலை குடிநீர் கட்டணத்தை பெற்றோர் செலுத்த வேண்டியுள்ளது.



இதனால் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி)

# பேரீச்சம்பழத்திற்கான தடையை நீக்க அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

பேரீச்சம்பழம் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

எதிர்வரும் மாதம் முஸ்லிம்களின் ரம்ழான் நோன்பு ஆரம்பிக்கப்படுவதால் பேரீச்சம்பழம் மீதான இறக்குமதி தடையால் அவர்கள் எதிர்கொள்ளும் பாதிப்பு குறித்து முஸ்லிம் எம்.பிக்கள் நேற்று முன்தினம் பிரதமர் மகிந்தவின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இதனையடுத்து, அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பேரீச்சம்பழம் மீதான தடையை நீக்குமாறு உடனடியாக பணிப்புரை வழங்கியுள்ளார்.

பேரீச்சம்பழம் உட்பட 367 பொருட்களை இறக்குமதி செய்ய தடைவிதிக்கப்பட்டதோடு இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அண்மையில் வெளியானமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இரும்புக் கம்பியின் விலையும் அதிகரிப்பு

(கொழும்பு)

இரும்புக் கம்பிகளின் விலையும் அதிகரித்துள்ளது.

இதற்கமைய 10 மில்லிமீற்றர் இரும்பு கம்பி ஒன்று 1,040 ரூபாவுக்கும், 12 மில்லிமீற்றர் கம்பி 1,500 ரூபாவுக்கும், 16 மில்லிமீற்றர் கம்பி ஒன்று 1,725 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் வீழ்ச்சி காரணமாக மூலப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளதோடு எதிர்காலத்தில் குறித்த கம்பிகளின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என உற்பத்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர். (நி-5)

# மின்சார வேலியில் சிக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த சிறுவர்கள் உயிரிழப்பு

(அம்பாறை)

விறகு பொறுக்குவதற்காக சென்ற இரண்டு சிறுவர்கள் மின்சாரவேலியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர்.

அம்பாறை சம்மாந்துறையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த இருவரும் 13 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இரு சிறுவர்கள் உயிரிழந்த சம்பவத்தில் சட்டவிரோதமாக மின்சார வேலி அமைத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யானைகள் வராமல் இருக்க அமைக்கப்பட்ட மின் வேலியில் அவர்கள் சிக்கிக் கொண்டதாக நம்பப்படுகிற நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (நி)

# கட்டுப்பாட்டு விலையை நீக்குமாறு

## மருந்தக உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குமாறு அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

டொலர் நெருக்கடியின் காரணமாக மருந்துகளை இறக்குமதி செய்ய முடியாமையால் பாரியளவில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக மருந்து இறக்குமதி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது 29 சதவீதத்தினால் மருந்துகளின் விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் , அதற்கான உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னரே மருந்து விநியோகம் முன்னெடுக்கப்படும் என்று இறக்குமதி நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இவ்வாறு கட்டுப்பாட்டு விலையை நீக்குவதன் மூலம் நாட்டில் எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடிய பாரிய மருந்து தட்டுப்பாட்டினை தவிர்த்துக் கொள்ள முடியும் என்று அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## உறவும் நல் உறவும்

உறவினர்களோடு நல்லுறவு வைத்துக் கொள்வது மிகப் பெரிய கலை. கடினமானதும் கூட.

அவர்களைப் புறக்கணித்துவிட்டு எந்த விழாவையும் எந்த நிகழ்ச்சியையும் நாம் சிறப்பாக நடத்தி விட்டதாக மார்தட்டிக்கொள்ள இயலாது. கூடிச் சேரும் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நம் சமுதாய அமைப்பு அப்படி. உறவினர்களுக்கு நம்மீது எந்தெந்த வகையில் எல்லாம் வருத்தமோ, கோபமோ வருகிறது தெரியுமா?

சரியாகப் பேசவில்லை என்பார்கள். தங்கள் வீட்டிற்கு–வீட்டு நிகழ்ச்சிகளுக்கு வரவில்லை என்பார்கள். அவர்களைப் பற்றி தவறாகப் பேசினோம் என்பார்கள். உதவவில்லை என்பார்கள். பாகப்பிரிவினை சரியில்லை என்பார்கள்.

இந்த ஐவகைக் குற்றச்சாட்டுக்களையும் தவிர்க்க முடியுமானால் உறவில் எந்தக் காலத்திலும் விரிசல் ஏற்படாத வகையில் நம்மால் காலம் தள்ளி விட முடியும்.

விசால மனம் கொண்டவர்கள் பின்னிரு காரணங்களையும் பெரிது படுத்த மாட்டார்கள். மேலும் சூழ்நிலைகளை ஒட்டியே இதில் யார் பக்கம் நியாயம் என்பதைப்பற்றி ஒரு முடிவுக்கு வர முடியும்.

ஆனால் முதல் மூன்று காரணங்கள் இருக்கின்றனவே அவை யாவும் நியாயமான குற்றச்சாட்டுக்களே. இவை பாசத்தின் அடிப்படையில் எழுபவை. அல்லது ஃபோர்மாலிட்டியின் அடிப்படையில் எழுபவை என்று கூட வைத்துக்கொள்ளுங்கள். இத்தகைய குற்றச்சாட்டுக்கள் நடுநிலைக் கண்ணோட்டத்துடன் நோக்கப்பட வேண்டும்.

இந்த உண்மையை புரிந்து கொள்ளாமல் உணர்ச்சி வசப்படுவதாலேயே அவர்களது குற்றச்சாட்டுக்களில் உள்ள நியாயம் நமக்கு பிடிபடாமல் போகிறது.

தவிர்க்க முடியாத சூழ்நிலைகளைத் தவிர உறவினர் வீட்டு நிகழ்ச்சிகளைத் தவற விடக்கூடாது. அவர்களைப் பற்றி தவறாக சொல்லிக் கொண்டிருக்க கூடாது. காணும் நல்ல அம்சங்களை பாராட்ட தயங்கக் கூடாது. முடிந்தவரை உதவ வேண்டும். பொருளுதவி செய்ய உதவாவிட்டாலும் கூட உடல் உழைப்பையாவது நல்க வேண்டும். பற்றும் பாசமும் ஏற்படும் வகையில் நன்கு பேசிக்கொள்ள வேண்டும்.

இயலாமையை உணர்த்த வேண்டுமே தவிர வருந்தும் படி நடந்து கொள்ளக்கூடாது. பதிலுக்குப் பதில் நேருக்கு நேர் என்று செயற்படாமல் ஒன்றிரண்டு விடயங்களில் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டு நாம் தான் அவர்களை வழி நடத்திச் செல்ல வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களிடம் குற்றம் குறை காண்பது என்னும் பழக்கத்தை கைவிட வேண்டும்.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்று ஔவைப்பாட்டி சும்மாவா சொல்லி விட்டுப் போனாள்?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### மூன்று மோதிரங்கள்



(நேற்றைய தொடர்ச்சி)

கேசவன் அவரிடம் "சுவாமி! தாங்கள் யாரோ? இங்கே எவ்வளவு காலமாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டான். அந்த சாதுவும் மெல்லிய குரலில் "நான் என் குருவை ஏமாற்றி அவர் வைத்திருந்த அரிய சக்தி வாய்ந்த மூன்று மோதிரங்களை அவருக்கு தெரியாமல் எடுத்துக் கொண்டு இமயமலையிலிருந்து இங்கே ஓடிவந்து விட்டேன். அவற்றைக் கொண்டு ராஜபோகம் அனுபவிக்கலாம் என்று மனக் கோட்டை கட்டினேன். ஆனால் என்னை இப்போது ஒரு கொடிய விஷப் பாம்பு தீண்டி விட்டது. நான் இறக்கத்தான் போகிறேன். அதற்கு முன் அந்த மூன்று மோதிரங்களையும் உங்களுக்குக் கொடுக்கிறேன். இந்த பச்சைக்கல் மோதிரத்தை வைத்திருப்பவனுக்கு அரிதான யோசனைகள் தோன்றும். இந்த சிவப்புக்கல் மோதிரத்தை வைத்திருப்பவனுக்கு அந்த யோசனைகளை செயற்படுத்தும் வழி தோன்றும். இந்த நீலக்கல் மோதிரத்தை வைத்திருப்பவன் அந்த வழியை செயற்படுத்தும் சக்தி பெற்றிருப்பான். உங்கள் மூவருக்கும் ஆளுக்கு ஒரு மோதிரம் கொடுக்கிறேன்" எனக் கூறிப் பச்சைக் கல் மோதிரத்தை கேசவனுக்கும் சிவப்புக் கல் மோதிரத்தை மாதவனுக்கும் நீலக்கல் மோதிரத்தை கோவிந்தனுக்கும் கொடுத்து விட்டு உயிர்நீத்தார்.

அவர்கள் அந்த சாதுவின் உடலை எரித்து விட்டு தம் ஊருக்கு வந்தார்கள். அவர்கள் நன்கு யோசித்து தாம் பெற்ற மோதிரங்கள் தம்மிடம் இருப்பதை விடத் தம் மன்னரிடம் இருந்தால் மக்களுக்கு பல நன்மைகள் ஏற்படும் என்று முடிவுக்கு வந்து அவற்றை மன்னனிடம் கொடுப்பது என்று தீர்மானித்தார்கள். மறுநாளே அவர்கள் தலைநகருக்குப் போய் மன்னனைக் கண்டார்கள். அவர்கள் தம்மிடமுள்ள மோதிரங்களை அவரிடம் கொடுத்து அவற்றின் அரிய சக்திகளைக் கூறினார்கள். மன்னனும் அவர்களைப் பாராட்டி அம் மோதிரங்களை வாங்கிக் கொண்டான்.

அவர்கள் மூவரையும் அவன் தன் அரண்மனையில் சில நாட்கள் தங்கி இருக்கும் படிக் கூறி அவர்கள் தங்க வசதியும் செய்து கொடுத்தான். மன்னன் அந்த அதிசய மோதிரங்களை எடுத்து போய் தன் ஒரே மகளான லதாங்கியிடம் காட்டி "இந்தப் பச்சைக் கல் மோதிரத்தை கேசவன் என்பவன் கொடுத்தான். (தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




சூழ்ச்சித் திறன்மிக்கவளாயும் விளங்கினாள். "கருமத்தை முடிப்பதில் தருமம் எது"? என்று சிந்திக்கமாட்டாள்.

**கள்ளம் புகுந்த உள்ளம்**

வானத்து நிலா வையகத்தைக் குளிர்விக்கிறது. பாற்கடலில் இருக்கும் பவளக் கொடிபோலக் கைகேயி சயனித்து இருந்தாள். உறக்கம் அவளைக் கிறங்கச் செய்தது: எனினும், அவள் அருள் உள்ளம் கொண்டவள் என்பதை அவள் அமைதியான கண்கள் காட்டின.

களங்கம் அற்ற அவள் முகம் பளிங்கு போல் ஒளிவிட்டது. தாமரை மலர் போன்ற அவள் சீறடியை அந்தப் பேரிடி போன்ற கரடி வந்து தீண்டியது: இராகு கேதுக்கள் தீண்டப் பெற்ற திங்களாய் மாறினாள் கைகேயி.

ஆழ்ந்த தூக்கத்திலும் தொட்டது யார்? என்பதனை அறியும் மெல்லிய உணர்வு அவள் பெற்றிருந்தாள்: வழக்கமாகத் தொடுவது: தன்னை வருடுவது தசரதன்: இது புதிய தொடுகை: எனினும், அவள் அறிவு விழித்துப் பேசியது. தெய்வக் கற்பினள் அதனால் அது தன் கணவன் கை அன்று என்பதை அறிந்து கொண்டாள்: கவலையற்ற மன நிலை. அதனால், தன் தூக்கத்தைக் கலைத்துக் கொள்ள விரும்பவில்லை.

கூனி தட்டி எழுப்பினாள்: தரையைக் கொழித்தாள்: குரலை உரப்பினாள்: "நெருப்புப் பற்றிக் கொண்டு எரிகிறது: நீ பொறுப்பு இழந்து உறங்குகிறாய்" என்று பொருமினாள்.

"இராமனைப் பெற்ற எனக்கு இடர் உளதோ?" என்று வினவினாள் கைகேயி.

"அதனால் தான் உனக்குப் படர்கிறது வேதனை" என்று உரைத்தாள்.

"கோசலை உயர்ந்தாள்: நீ தாழ்ந்தாய்" என்று அறிவித்தாள்.

"இராமன் மகளிரின் எதிரி: அவன் சீர்மை தவறிய உதிரி: அவன் ஏற்றம் கண்டு இங்கு வந்து இருக்கிறேன் பதறி" என்றாள்.

"அவன் ஏற்றத்தால் ஏற்பட்ட மாற்றம் யாது?"

"அவன் பட்டத்துக்கு உரியவன் ஆகிறான்: அதனால், கோசலையின் திட்டம் செயல் பட்டுவிட்டது".

பட்டுபட்டு என்று பேசிய பதற்றம் கண்டு அவள் வியந்தாள்.

"கோசலைக்கு அப்படி என்ன புது வாழ்வு புகுந்து விட்டது? பரதனை அவள் வரதனாக ஏற்று இருக்கிறாள்: விரதம் மிக்கு உடையவள்: தசரதன் அவள் கணவன்: பட்டத்து முதல்வி: இவற்றைவிட அவளுக்கு உயர்வு வேறு என்ன தேவைப்படுகிறது?" என்று கேட்டாள்.

"நாளை இராமன் முடிசூடப் போகிறான்: நாளை வாழ்வு இது: கோசலை வாழ்கிறாள்: நீ தாழ்கிறாய்" என்றாள்.

"இவ்வளவு நல்ல செய்தி சொல்ல முன்னுரை ஏன்? முகவுரை தேவை இல்லை: பதவுரையும், விளக்கவுரையும், உன்னை யார் கேட்டது? இராமன் முடி சூடுகிறான் என்பதை முன்னமே கிளந்து இருக்கலாமே. என் உள்ளம் குளிர, நீ கூறிய உரை என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது: உனக்கு என்ன பரிசு தருவது? என்று தெரியாமல் தவித்துக் கிடக்கிறேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்த, கருத்தற்ற பேச்சாளர்கள் பேச்சை வளர்த்துக் கொண்டே போவர்.
- மான் டெஸ்கியூ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# கிளர்ச்சிக்கு மக்கள் தயார் தலைமையேற்க யார் உளர்?

அரசாங்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய மக்கள் தயாராகி வருகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரிக்கை செய்துள்ளார்.

அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதற்கு மக்கள் தயார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுவதன் மூலம் அவர் அரசாங்கத்துக்கு என்ன சொல்ல விளைகிறார் என்பதுதான் புரியாமல் உள்ளது.

அதாவது மக்கள் கிளர்ச்சி செய்யப் போகின்றனர். எனவே அந்தக் கிளர்ச்சியைத் தடுக்க வேண்டும் என்று சொல்கிறாரா? அல்லது பொருட்களுக்கு ஏற்றிய விலையைச் சடுதியாகக் குறைக்க வேண்டும் என்று கூறுகிறாரா என்பதுதான் புரியாமல் உள்ளது.

அரசாங்கத்தின் சமகாலப் போக்கு மிகவும் மோசமாகவுள்ளது.

பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களுக்கு ஒருபோதும் இல்லாத அளவில் விலையேற்றப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக, உணவுப் பொருட்களின் விலை கண்டபாட்டில் அதிகரிக்கப்பட்டுள்ளதால், மக்கள் வறுமையால் வாடுகின்ற அவலம் நெருங்கி வருகிறது.

இந்நிலையில், அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்திருக்க வேண்டும். வீதியில் இறங்கிப் போராடியிருக்க வேண்டும்.

ஆனால் மக்கள் அவ்வாறு செய்யவில்லை. இதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உண்டு.

அதில் ஒன்று பலமானதும் செல்வாக்கு மிக்கதுமான எதிர்க்கட்சியோ, எதிர்க்கட்சித் தலைவர்களோ நாட்டில் இல்லாமை.

மற்றையது பௌத்த பீடங்கள் எதுவும் தெரியாதது போல மௌனமாக இருப்பது.

இந்த இரண்டு காரணங்களாலேயே பொதுமக்களால் கிளர்ச்சி செய்ய முடியாமல் உள்ளது.

உண்மையில் முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற மங்கள சமரவீர உயிரோடு இருந்திருந்தால், அவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் சேர்ந்து அரசுக்குப் பாடம் புகட்டியிருப்பார்.

என்ன செய்வது மக்களின் கெடுகாலம், கொரோனாத் தொற்றுக்கு மங்கள சமரவீர பலியாகிப் போனார்.

இப்போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் எதுவும் செய்ய முடியவில்லை.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் களத்தில் இறங்கி மக்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்யக் கூடிய வல்லமை இல்லாதவர்கள்.

இவர்களின் பலயீனம்; பலம்மிக்க சந்திரிகா குமாரதுங்கவின் துணிச்சலையும் ஆளுமையையும் அடித்து நொருக்கிவிட்டது.

தவிர, பதவிக்கு ஆசைப்பட்ட பௌத்த துறவிகள் வாய் அடங்கிப் போயுள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், மக்கள் கிளர்ச்சி செய்வர் என்று கூறுகின்ற முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் யார்? அதற்குத் தலைமை தாங்குவர் என்று கேள்வி கேட்பதில் தவறில்லை.

# தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்கவே பேச்சுவார்த்தை

## கூட்டமைப்பின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொள்கைப்பற்றுடைய எம்மை யாரும் தமது சுயஇலாபத்துக்காக பயன்படுத்த முடியாது என்று தெரிவித்த சம்பந்தன் தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதை இலக்காகக் கொண்டே பேச்சுக்களை முன்னெடுப்போம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுக்கான கதவுகள் திறக்கப்படுகின்றபோது அச்சந்தர்ப்பத்தினை கைவிட்டு விடமுடியாது என்று குறிப்பிட்ட அவர், புதிய அரசியலமைப்பில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை அழுத்தமாக வலியுறுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை நாளை செவ்வாய்க்கிழமை 3.30 இற்கு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வருகை தருமாறு ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

# சைக்கிள் திருடியவர் பருத்தித்துறையில் கைது சைக்கிள்களும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பாடசாலை மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகளைத் திருடி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 10 துவிச்சக்கரவண்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே நேற்று கைது செய்யப்பட்டார்.

"விசாரணைகளில் 20 துவிச்சக்கரவண்டிகளைத் திருடி விற்பனை செய்துள்ளதாக சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அவற்றில் 10 துவிச்சக்கரவண்டிகளே கைப்பற்றப்பட்டுள்ளன. ஏனையவை தேடப்பட்டு வருகின்றன" என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஞா-33,60)

# கச்சாய் பகுதியில் விபத்து; இளைஞன் படுகாயம்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் வாகையடிப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து வீதியோரம் காணப்பட்ட கம்பத்துடன் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் க்ச்சாய் தெற்கு பகுதியைச் சேர்ந்த எஸ். சாரூஜன் என்ற இளைஞனே கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஞா-30)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை 15 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ் பிரதேசத்தில்** நாரந்தனை தெற்கு, நாரந்தனை நீர்வழங்கல் திட்டம், புளியங்கூடல், சரவணை சந்தி, சுருவில்- ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், சூடுவெந்தபுலவு ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** சாளம்பன் நாகச்செட்டி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி, சிவபுரம், பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேராவில்ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற இருவர் முல்லையில் கைது

(பனிக்கன்குளம்)

அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பகுதியில் மணலுடன் இரண்டு கனரக வாகனங்களையும் அதன் சாரதிகள் இருவரையும் நேற்றைய தினம் நட்டாங்கண்டல் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள குறித்த வாகன சாரதிகள் இருவரும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்துள்ளதாகவும் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை மாங்குளம் நீதவான் நீதிமன்றில் கனரக வாகனங்களையும் சாரதிகளையும் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்கு மாந்தை கிழக்கு பகுதிகளில் இருந்தும் மணல் வளங்கள் அகழப்பட்டு ஏற்றப்படுகின்றன என்று கடந்த மாத பிரதேச செயலக ஒருங்கிணைப்பு கூட்டத்தில் பொதுமக்களால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த கைது சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஞா-281)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனிதன்



"அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது" என்பது ஆன்றோர் வாக்கு ஏன் அவ்வாறு கூறுகின்றனர்? மனிதன் ஒருவனால் தான் பிறவற்றைக் கண்டு நலன் உணர்ந்து அவைகளைப் போன்று போலி (mitate) செய்து வாழ முடிகிறது. இயற்கைகளை மாற்றித் தன் வாழ்வின் மேம்பாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடிகின்றது. தன்மூலத்தை உணர்ந்து தன்னைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக பிற எவருக்கும் எந்த ஒன்றுக்கும் இன்னல் பயவா இன்ப வாழ்வு வாழ முடிகின்றது. இவ்வாறு வாழ்வது தான் மனிதனின் இயற்கை.

எனவே தான் மனிதன் என்ற பெயரைப் பெற்றான். அதாவது எவன் ஒருவன் மனத்தை இதமாக வைத்துக் கொள்கிறானோ அவன் தான் மனிதன் என்ற பொருளில் இச்சொல் ஏற்பட்டுள்ளது. மனம் என்ற சொல்லைப் பார்த்தால் அதுவும் இதே பொருளைத் தான் அழுத்தமாக உணர்கின்றது. "மனம்" என்ற சொல் "மன்" என்ற வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்தது. மன் என்றால் நிலையானது. அழியாமை என்று பொருள் ஆனால் நாமோ மனத்தைப் பேயாக குரங்காக இருப்பதனை உணர்கிறோம்.

ஆனால் அதே மனத்தைத் தவத்தால் தற்சோதனையால் புறத்தே குதிக்காமல் அகத்தே ஆழ்ந்து தன்னையுணர்கின்ற மெய்யுணர்வு தோன்றுகிறது. அப்போது தானே எல்லாவற்றுள்ளும் எல்லாமும் தன்னுள்ளும் இருப்பது உணரப்படுகின்றது. அந்த நிலையில் மனம் இதமாகிறது. இதனைத்தான் மனிதன் பெற வேண்டும்.

மனம் படைத்த மனிதன் (மன் + இதன்) நிலைபேறான மெய்ப்பொருள் உணர்வு பெற்ற வாழ்வு வாழ வேண்டுமானால் மனம், மொழி, செயல் மூன்றிலும் இனிமை தோன்ற வாழ வேண்டும். இத்தகையவர்களைத் தான் வள்ளுவர் செம்பொருள் கண்டவர்கள் என்கிறார். மனத்தைத் தெளிந்து மனம் நிலைத்து மக்களுக்கும் பிற உயிர் இனங்களுக்கும் மன இதமாய்த் தொண்டாற்றுகின்ற பெருமக்களே நிறை மனிதர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 18

**2016** ஆம் ஆண்டில் மாவட்டத்தினுள் வீதிகளின் நீளம் 1115 கிலோ மீற்றர்களாகக் காணப்பட்டது. மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (53%) அதைத்தொடர்ந்து கைத்தொழிற் துறையில் (31%) மற்றும் விவசாயத் துறையில் (16%) ஆகும்.

### களுத்துறை மாவட்டத்தின் இனப்பிரிவு மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு-2012

மாவட்டத்தின் சனத்தொகை, இனப்பிரிவு மற்றும் சமய அடிப்படையில் வேறுபட்டுள்ள விதம் அட்டவணை (C1)ல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை (c1)இனப்பிரிவு மற்றும் சமய அடிப்படையில் வேறுபாடு- களுத்துறை மாவட்டம்

| இனப்பிரிவு | எண்ணிக்கை | % | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 1,060,107 | 86.8 | பௌத்தம் | 1,018,909 | 83.4 |
| இலங்கைத் தமிழர் | 23,035 | 1.9 | இந்து | 39,541 | 3.2 |
| இந்தியத் தமிழர் | 23,217 | 1.9 | இஸ்லாம் | 114,556 | 9.4 |
| இலங்கை முஸ்லிம் | 113,320 | 9.3 | ரோமன் கத்தோலிக்கம் | 39,774 | 3.3 |
| வேறு | 2,269 | 0.2 | வேறு கிறிஸ்தவம் | 8,956 | 0.7 |
| | | | வேறு | 212 | - |
| மொத்தம் | 1,221,948 | 100 | மொத்தம் | 1,221,948 | 100 |

அட்டவணை (C1)ல் காட்டப்பட்டுள்ளவாறு சனத்தொகையில் பெரும்பான்மையினர் (86.8%) சதவீதமான சிங்கள இனமக்கள் என்பதோடு, பௌத்த சமயத்தவர்கள் (83.4% )சதவீதமாகும். இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகை (9.3%) சதவீதமென்பதோடு (9.4%) சதவீமானவர்கள் இஸ்லாம் சமயத்தவர்களாகும். இலங்கை மற்றும்இந்தியத் தமிழ் மக்களின் எண்ணிக்கை 3.8% சதவீதமென்பதோடு,3.2% சதவீதமான மக்கள் இந்து சமயத்தவர்களாகும். றோமன் கத்தோலிக்கர்கள் மற்றும் ஏனைய கிறிஸ்தவ சமய மக்களின் சனத்தொகை மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 4 சதவீதமாகும்.

களுத்துறை மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012

| பிரதேசச்செயலகம் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|
| பாணத்துறை | 1473 | 25744 |
| பண்டாரகம | 531 | 12131 |
| ஹொரணை | 2100 | 99 |
| இங்கிரிய | 5440 | 17 |
| புளத்சிங்கள | 7446 | 2227 |
| மதுராவெல | 2854 | 8 |
| மில்லணிய | 1547 | 38 |
| களுத்துறை | 2009 | 12402 |
| பேருவளை | 1779 | 57058 |
| தொடங்கொட | 7193 | 42 |
| மத்துகம | 7081 | 2915 |
| அகலவத்தை | 924 | 69 |
| பாலிந்தநுவர | 4292 | 557 |
| வளள்ளாவிற்ற | 1583 | 13 |
| களுத்துறை மாவட்டம் | 46252 | 113320 |

### களுத்துறை மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்திற்கு 22 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக் கப்பட்டனர்.

2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி களுத்துறை மாவட்டம் 11 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்திற்கு 22 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். இதன்படி களுத்துறை மாவட்டம் 11 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

களுத்துறை மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 762 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 1,221,948 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 111,086 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

**களுத்துறை மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 762 கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 1,221,948 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 111,086 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

களுத்துறை மாவட்ட செயலகத்தில் 07.12. 2017 காலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 24 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 16 பிரேரணைகள் அடங்களாக மொத்தம் 40 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

பெரும்பாலான பிரேரணைகளின் பரிந்துரைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் செய்ய வேண்டிய முறைபற்றி கூறியிருந்தாலும் அவற்றுள் சில சரியான தகவல்களைத் தரவில்லை. அநேகமான பிரேரணைகளின் பரிந்துரைகளில் எல்லை நிர்ணயம் பிரதேச செயலக பிரிவுகளின் எல்லைகளையும் உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும், பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளின்) எல்லைகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என கூறப்பட்டிருந்தன.

பரிந்துரைக்கப்பட்டவற்றில் தொகுதிகளுக்கு இடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், பல ஆலோசணைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் எடுக்க முடியவில்லை. அதுமட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன.

அதாவது, கிராம அலுவலர் பிரிவுத்தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத்தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது. அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைக் கூறு போடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது.

எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக் கொண்டுள்ளது. மேலும் அனைத்து இனத்தவர்களினதும் சம நிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து முடியுமான வகையில் குறிப்பிட்ட தொகுதிகளில் அவர்களின் சமூகவிருப்பங்களை நிறைவு செய்யும்வகையில் தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இரண்டு பிரேரணைகள் சில பிரதேசங்களில் பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை பரிந்துரைத்தன. பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை உருவாக்குவதற்கு போதிய அளவு சனத்தொகை இந்த பிரதேச செயலகப் பிரதேசங்களில் இல்லை என்பதை குழு கண்டறிந்தது. ஆனால் தேர்தல் தொகுதிகளை உண்டாக்கும் போது இந்தப் பிரேரணைகளை கருத்தில் எடுத்துக் கொண்டுள்ளது.

ஒரு பிரேரணை சிறுபான்மை இனத்தின் (முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள்) உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தேர்தல் தொகுதிகளை உருவாக்கும்படி கோரி இருந்தது. முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 9.3% இலும் மற்றும் 3.8% இலும் உள்ளதை குழு அவதானித்தது. அதே நேரத்தில் ஒரு உறுப்பினருக்கான சனத்தொகை வீதம் 9.1% ஆகும். இதன் பிரகாரம் இம் மாவட்டத்தில் முஸ்லீம் மக்களுக்காக பேருவளை தொகுதி ஒதுக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டு மக்களை...

குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கிய உறுதி மொழிக்கமையவே விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

2021ஆம் ஆண்டுக்குள் புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியை நம்பித்தான், 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு வழங்கினேன்.

ஆனால், புதிய அரசமைப்பு இன்னும் கொண்டுவரப்படவில்லை. நாட்டு மக்களை நம்பவைத்து ஜனாதிபதி ஏமாற்றி விட்டார். 20 இற்கு ஆதரவளித்ததால் தற்போது மனம் வருந்துகின்றேன்.

பஸில் ராஜபக்ஷ நாட்டு வளங்களை விற்றுப் பிழைப்பவர். மகிந்தவையும் அவரே கட்டுப்படுத்துகின்றார். கோட்டாபய ராஜபக்ஷ என்பவர் பஸிலால் இயக்கப்படும் கைப்பாவை. இந்த நாட்டை சீரழித்துவிட்டு பஸில் எப்படியும் அமெரிக்கா சென்றுவிடுவார்" என்றார். (ஞா)

## தாய் மற்றும்...

பில் மேலும் தெரியவருவதாவது,

குடும்ப பெண் மற்றும் அப்பெண்ணின் மகள் இருவர் மீது நபர் ஒருவர் வீடு புகுந்து சரமாரியாக கத்தியால் குத்திவிட்டு, தானும் அதிகளவான தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அறிந்த அயலவர்கள் மூவரையும் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (ஞா-18,33)

## பிசிஆர்...

கான பி.சி.ஆர் பரிசோதனை இன்று முதல் மேற்கொள்ளப்படமாட்டாது என வைத்தியசாலை பணிப்பாளர் நந்தகுமாரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் வெளிநாடு செல்பவர்களுக்கான பிசிஆர் பரிசோதனையில் மாதிரி சேகரிப்பு பணியிலிருந்து வைத்தியர்கள் விலகுவதால் வெளிநாடு செல்பவர்களுக்கான பிசிஆர் பரிசோதனை நிறுத்தப்படுகிறது என்றார்.

அதேவேளை நோயாளிகளுக்கான பிசிஆர் பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்றார். (ஞா-33)

## 13ஆவது திருத்த...

13ஆவது திருத்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்று வவுனியாவில் மாபெரும் எழுச்சி பேரணி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பேரணியானது வவுனியா பண்டாரவன்னியன் சிலைக்கு முன்பாக மாவீரர் ஒருவரின் சகோதரன் ஈகச்சுடர் ஏற்றியதை தொடர்ந்து பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. ஏ9 வீதி வழியாக சென்று தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் பேரணி நிறைவுற்றது.

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை 13ஆம் திருத்தத்திற்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிக்க அனைத்து தமிழ் மக்களும் பூரணமான ஆதரவை வழங்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தி வருகின்றது.

குறித்த பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் மற்றும் கட்சியினது சட்ட ஆலோசகர் காண்டீபன், ஊடக பேச்சாளர் சுகாஸ் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ஞா-250,299)

## பசில் ராஜபக்ஷ...

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் கட்சி முகாமைத்துவக் குழுவும் கலந்துரையாடி உடனடி நடவடிக்கை எடுப்பதாக அத்தநாயக்க மேலும் தெரிவித்தார். (ஞா)

## டீசலின்...

யில் ஒரு லீற்றர் டீசலின் விலையை 120 ரூபாயால் அதிகரிக்க வேண்டும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித்விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

டீசல் லீற்றர் ஒன்றிற்கான நட்டம் 120 ரூபாய் என்ற போதிலும் ஒரு லீற்றர் டீசல் 55 ரூபாயினால் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக அதிகரித்துள்ள எரிபொருள் விலைகள் பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலுக்கு ஏற்பட்ட நட்டத்தை மட்டுமே ஈடுசெய்யும்.

டீசலுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுசெய்ய லீற்றருக்கு 120 ரூபாயினால் விலையை அதிகரிக்க வேண்டும் எனவும் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம)

## கோட்டா இருக்...

ஜனாதிபதிக்கு செய்தி ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வீட்டிற்குள் இருந்துகொண்டு ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தாது, வெளியில் இறங்கி போராட வாருங்கள். கஷ்டங்களை எதிர்நோக்கும் அனைவரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு கொழும்புக்கு வாருங்கள்.

மக்களுடன் இணைந்து போராட்டம் நடத்தப்படுவது மட்டுமின்றி ஜனாதிபதி இருக்கும் இடத்தை தேடிச் செல்வோம். மக்களின் நிலைப்பாடுகளுக்கு செவிசாய்க்கவில்லை என்றால், கடும் முடிவுகளை எடுப்போம். அனைத்து ராஜபக்ஷக்களின் மூளைகளும் தோல்வியடைந்துவிட்டன என்றார். (ஞா)

## யாழ்.வருகிறார்...

னம் மூலம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு (பலாலி) வருகை தரவுள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, இந்தியத் தூதர் கோபால் பாக்லே ஆகியோர் அவரை வரவேற்கவுள்ளனர்.

BIMSTEC (பல்துறை, தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி) மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி இலங்கை வருகிறார். (ஞா)

## தமிழர்களின்...

சந்தர்ப்பத்தை சரியாகக் கையாள வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற 13ஆவது திருத்த சட்டத்திற்கு எதிரான பேரணிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். (ஞா-250,299)

## புலமை...

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான வெட்டுப்புள்ளியாக 148 புள்ளிகள்வழங்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களின் தரவரிசை வெளியிட முடியாது.

இதேவேளை பெறுபேறுகளை https://www. doenets.lk/examresults இணையத்தளம் அல்லது https://www.exams.gov.lk/examresults இணையத்தளம் ஊடாக அறிந்துகொள்ள முடியும்.

2021ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நாடுமுழுவதும் 2 ஆயிரத்து 943 பரீட்சை நிலையங்களில் இடம்பெற்றதுடன், 3 இலட்சத்து 40 ஆயிரத்து 507 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். (ஞா-18,33)

## கோட்டா...

வரும் 23ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் சர்வ கட்சி மாநாட்டை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தை அங்கீகரிக்கும் அரசியல் கட்சி தலைவர்களை ஒன்றிணைத்து எதிர்வரும் 23ஆம் திகதி சர்வகட்சி மாநாட்டை நடத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது இணக்கம் தெரிவித்ததாக சுதந்திர கட்சியினர் குறிப்பிட்டனர். (ஞா)

## சர்வதேச...

தெரியவருகிறது. தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் சந்திக்கவுள்ளனர். (ஞா)
































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10597)

**076 825 7716** (ஆகாஸ்)



**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536



**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-3955)


## டெங்கால் உயிரிழந்த மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



(கரணவாய்)

டெங்கு நோய்த் தொற்று காரணமாக உயிரிழந்த மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய பின்னர் மேற்படி மாணவன் டெங்கு நோய்த் தொற்று காரணமாக கடந்த இரண்டாம் மாதம் 13 ஆம் திகதி உயிரிழந்திருந்தான். இந்நிலையில் புலமைப்பரிசில் பரீட்சை முடிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவுவெளியான நிலையில் அம் மாணவன் 155 புள்ளிகளைப் பெற்று சித்தி எய்தியுள்ளார். (ஞா-60)


**தேவை**

சுன்னாகம் பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் அரச ஊழியர் குடும்பத்திற்கு குழந்தையொன்றை பகல்வேளை பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். (10598)

**077 007 6944**



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**



உ

யாழ். வண. கிழக்கு, கலட்டி

**எச்சாட்டி மஹாமாரியம்மன் தேவஸ்தானம்**

கலட்டி அம்மன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

**பிராமணக் குருக்கள் தேவை**

எமது ஆலயத்தில் கடமையாற்றுவதற்கு பிராமணக் குருக்கள் தேவை. விரும்புவர்கள் தங்களது சுயவிபரக் கோவையுடன் 19.03.2022 சனிக்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

021 221 2102 தலைவர்
077 645 2239 முகாமையாளர்
077 379 5703 செயலாளர்

ஆலய பரிபாலன சபையினர் (C-3962)



**பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு**

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சிற்றுண்டி உணவகத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.



அனுபவம் அவசியமில்லை
பயிற்சி வழங்கப்படும்
சம்பளம் **20'000/-** (C-3964)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். **0777-068-777**



**விரைவு பொதிகள் சேவை**


**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-3942)

**0768226240** DHL


# மரண அறிவித்தல்



பிறப்பு 13 – 03 – 1942

இறப்பு 13 – 03 – 2022

## சின்னத்தம்பி ஆறுமுகம்

மல்வம் உடுவிலைப் பிறப்பிடமாகவும் பெரியவிளான் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்கள் நேற்று (13.03.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெரியவிளான்,
இளவாலை.

தகவல் :-
குடும்பத்தினர் (C-3966)

# மரண அறிவித்தல்



## வேலாயுதன் ஸ்ரீதயாபரன்

(முகாமையாளர் - Future Life Investment Limited, நெல்லியடி)

நெசவு வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதன் ஸ்ரீதயாபரன் அவர்கள் நேற்று முன்தினம் (12.03.2022) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேலாயுதன் - தெய்வானை தம்பதியரின் அன்புப் புத்திரனும் காலஞ்சென்ற வேலாயுதம் - துரையம்மா தம்பதியரின் அருமை மருமகனும் தேவமனோகரியின் அன்புக் கணவரும் டிலன்ஜாவின் பாசமிகு தந்தையும் ஸ்ரீதரன், ஸ்ரீசாயிசங்கர், ஸ்ரீதயாபரி, ஸ்ரீசண்முகப்பிரியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயசீலன், அசோகரட்ணம், மகேந்திரன், விமலேந்திரன், இளவேந்தன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் வைஷ்ணவியின் அருமை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-3965)

நெசவு வீதி,
உடுப்பிட்டி.

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.